# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

**அசல் வழக்கு எண். 67/2022**

**நாள்:** 14.02.2025

**பெயர் : சீதாலெட்சுமி**

**PW**

**குறுக்கு விசாரணை**

2ம் பிரதிவாதி மருத்துவமனைக்கு வந்தவர் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்தார். அவர் எனக்கு ஆதரவாக வந்துள்ளார் என்றால் சரியல்ல. நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா கிராமத்தில் எனது தகப்பனார் குடும்பம் மதிப்புமிக்க வசதியான குடும்பம். என் தகப்பனார் குடும்ப கௌரவத்துக்கு தக்கவாறு எனக்கு எனது சகோதரிகளுக்கும் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. என்கணவர் வீட்டு குடும்பம் வசதியான குடும்பம் தான். எனக்கு 4, 5 பவுன்கள் தான் கல்யாணத்துக்கு போட்டார்கள். முதல் பிரதிவாதிதான் பவுண் செலுவுக்கு எல்லாம் தனது சொந்த சம்பாதியத்தில் செய்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் தான் செலவு செய்தார். என் வீட்டு கிரகபிரவேசத்திற்கும் 1ம் பிரதிவாதி குறைந்தளவு தான் செலவு செய்தார். கிரகபிரவேசத்தின் போதும், எனது மருத்துவ செலவிற்கும் அவர் நல்ல செலவு செய்திருந்தார் என்றால் சரியல்ல. 2013ம் ஆண்டு எனது தாயார் இறந்தார். தாயார் இறப்பிற்க்கு நானும் மற்ற சகோதரிகளும் வழக்கப்படி எல்லாம் செய்து முடித்தோம். எனது தாயார் உயிருடன் இருக்கும் போது நானும் மற்ற சகோதரிகளும் வந்து பார்த்து சென்றோம் என்றால் சரிதான். சொத்து சம்மந்தமாக எந்த பத்திரமும் எழுதி கொடுக்க கூடாது என்று எந்த பேச்சும் இல்லை. 1 ம் வாதி சகுந்தலா வீட்டில் சொத்து சம்மந்தமாக எதும் பஞ்சாயத்து பேசப்பட்டதா என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி இவ்வழக்கில் என்ன கட்சி சொல்கிறார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 1ம் வாதி கையெழுத்து போட்டுள்ளாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. 1ம் வாதி சகுந்தலாவிடம் இது சம்மந்தமாக எதுவும் கேட்கவில்லை. சாதாரணமாக சகுந்தலா மற்றும் கோகிலா கையெழுத்து எனக்கு தெரியாது. என் அம்மா செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தது சம்மந்தமாக 1ம் வாதி வீட்டில் பஞ்சாயத்து பேசப்பட்டது

சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. 2009ல் சகுந்தலா வீட்டில் பட்டா மற்றுவது சம்மந்தமாக பஞ்சாயத்து பேசப்பட்டது சம்மந்தமாகவும் எனக்கு எதுவும் தெரியாது. பஞ்சாயத்து பேசப்பட்ட விவரம் மற்றும் எழுத்து மூலமாக எழுதப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. அவ்வாறு எழுதப்பட்டதில் சகுந்தலா, கோகிலா, கந்திமதி ஆகியோர் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த பஞ்சாயத்து எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. சகுந்தலா ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ளபடி அவர் சாட்சிக்கு வராமால் என்னை சாட்சிக்கு வர வைத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக 1 வாரத்திற்கு முன்பு சகுந்தலாவிடம் பேசினேன் என்றால் சரிதான். அப்போது இந்த பஞ்சாயத்து நடந்தது சம்மந்தமாக எதுவும் நான் கேட்கவில்லை. எனது அப்பா வீட்டிற்கு பக்கத்தில் வைத்தியநாதர் ஐயர் என்று ஒருவர் இருந்தார். அவர் எங்கள் குடும்பத்திற்கு பழக்கமானவர். தற்போது அவர் எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது. வைத்தியநாத ஐயர் எனது அக்கா சகுந்தலா போனில் எதுவும் பேசினார்களா என்று எனக்கு தெரியாது. வைத்தியநாத ஐயர் எனது அக்கா சகுந்தலாவும் உயில் சம்மந்தமாக போனில் பேசினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வைத்தியநாத ஐயர் சகுந்தலாவிடம் எனது அப்பா உயில் எழுதியது உண்மை என்று சொல்லியுள்ளார் என்றால் அது தவறு. நடந்த பஞ்சாயத்தில் 1ம் பிரதிவாதி ராஜம்ராம் பெயருக்கு பட்டா மாற்றி கொள்ள சம்மதம் தெரிவித்து தான் என்னுடைய மூன்று சகோதரிகளும் கையெழுத்து செய்தார்கள் என்றும், அந்த விவரமும் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ராஜாராம் எங்கள் குடும்பத்தில் ஏதேனும் அயிட்ட சொத்தினை விற்று உள்ளாரா என்றால் 2019ல் ராஜாராம் சில அயிட்ட சொத்துகளை விற்ற விவரம் 2022ல் தெரியும். அதற்கு நானோ எனது அக்காவோ சொத்துனை விற்பனை செய்ய ஆட்சேபனை செய்து அதிகாரிகளுக்கு புகார் அனுப்பினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராஜாராம் பெயருக்கு பட்டா மாற்றுவதற்கு அதிகாரிகள் உத்தரவு போட்டுள்ளார்களா என்ற விவரம் தற்போது வரை எனக்கு தெரியாது. பட்டா மற்றுவது சம்மந்தமாக எனக்கு நோட்டீஸ் வரவில்லை. சகுந்தலாவிற்கு நோட்டீஸ் வந்ததா என்று எனக்கு தெரியாது. என்னிடம் கேட்ட கேள்விகளை சகுந்தலாவிடம்

கேட்டால் தெரியாது என்று சொல்லமுடியாது என்பதால் தான் என்னை சாட்சிக்கு வரவைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனார் தாவா சொத்துக்கள் குறித்து உயில் மூலம் என் தாயாருக்கு கொடுத்திருக்கிறார் என்ற விவரமும் அந்த உயில் விவரமும் எங்களுக்கு தெரியும் என்று சொன்னால் தவறு. தாவா சொத்துகளை பொறுத்து என் தாயார் என் சகோதரர் 1ம் பிரதிவாதி செட்டில் மெண்ட் மூலம் கொடுத்திருக்கிறார், அந்த விவரமும் எங்களுக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் தவறு. ஆரம்பத்தில் நானும் மற்ற சகோதரிகளும் எல்லா ஆவணங்களை ஒத்து கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து பிற்பாடு பிறர் தூண்டுதலின் பெயரில் பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாராயணசாமி மகன் முனியப்பன் என்பவர் எங்களுக்கு நெருங்கிய சொந்தம். வைத்தியலிங்கம் மகன் ராமதாஸ் என்பவர் எங்களுக்கு நெருங்கி சொந்தம். பொன்னுசாமி மகன் ரகுபதி என்பவர் எங்களுக்கு நெருங்கி சொந்தம். 1ம் பிரதிவாதி தாவா சொத்துகளை எங்களுக்கு தெரிந்து சொந்த முறையில் அனுபவித்து வருவதால் அவருக்கு சொத்து சொந்தமாகிவிட்டது என்று சொன்னால் தவறு. எங்களது வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை.